# ராமச்சந்திரா பல்கலையில் பயிலரங்கம்

போரூர்

போரூர், ஸ்ரீ ராமச் சந்திரா பல்கலைக் கழகத்தில் மகப்பேறு துறை சார்பில் சர்வதேச பயிலரங்கம் நேற்று நடந்தது.

இது குறித்து வெளி யிடப்பட்ட செய்திக் குறிப்பில், 'போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா பல்கலைக் கழகத்தில், மகப்பேறு துறையின் சார்பில் ஒரு வார திறமை மேம் பாட்டு பயிலரங்கம் நேற்று துவங்கியது.

இதில், பல்வேறு மாநிலங்கள் மற்றும் நேபாளத்தில் இருந்து, 400க்கும் மேற்பட்ட மகப்பேறு மருத்துவத் துறை பட்ட மேற் படிப்பு மாணவர்கள், கலந்து கொண்டனர்.

பயிலரங்கில், விஜயா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை இயக் குனர் சாவித்திரி சுப்ர மணியன், ஜோசப் நர்சிங் ஹோம் இயக்குனர் குரியன் ஜோசப், ராமச் சந்திரா பல்கலைக் கழக வேந்தர் வெங்க டாச்சலம், பல்துறை தலைவர் சோமசுந்தரம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்' என, தெரி விக்கப்பட்டுள்ளது.